Regional Bulletin / Puducherry / Tamil Script / 27-04-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணக்குமார்

தேதி : 27.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மக்களவை தேர்தலில் 88 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்ற 2 ஆம் கட்ட தேர்தலில் 70.21 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2 ஆம் கட்ட மக்களவை தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். பாஜக தலைமையிலான கூட்டணிக்கு இளைஞர்களும் பெண்களும் ஆதரவு அளித்து வருவதாக அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

3 ஆம் கட்ட மக்களவை தேர்தல் மே மாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வாக்குப்பதிவு (15)

13 மாநிலங்களில் உள்ள 88 தொகுதிகளில் 2 ஆம் கட்ட வாக்குப்பதிவு நேற்று அமைதியாக நடைபெற்றது. இந்த தேர்தலில் 70.21 சதவிகிதம் வாக்குகள் பதிவானதாகவும், காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி போட்டியிட்ட வயநாடு தொகுதியில், 72.70 சதவிகிதம் வாக்குகள் பதிவானதாகவும் தலைமை தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணும் மையங்களுக்கு பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டன. உலகின் மிகப் பெரிய ஜனநாயக திருவிழாவான மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப்படுகிறது. முதற்கட்ட வாக்குப்பதிவு கடந்த 19 ஆம் தேதி தமிழகம், புதுச்சேரி உட்பட 21 மாநிலங்களில் உள்ள 102 மக்களவை தொகுதிகளில் அமைதியாக நடந்து முடிந்தது. இந்நிலையில், கேரளா, கர்நாடகா, சட்டீஸ்கர், மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம் உள்ளிட்ட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் நேற்று 2 ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

ஒப்புகை சீட்டு1 (14)

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளுடன், வாக்கு ஒப்புகை சீட்டுகளை முழுமையாக எண்ணி ஒப்பிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனைத்தையும் உச்சநீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது. இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்கள் நிறைவடைந்த நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய்கன்னா, தீபாங்கர் தத்தா ஆகியோர் தலைமையிலான அமர்வு இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்தது.

அப்போது ஒப்புகை சீட்டுகளை 100 சதவிகிதம் ஆய்வு செய்யக் கோரிய அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பில், ஜனநாயகம் என்பது அதன் தூண்களின் ஒருமைப்பாடு மற்றும நம்பிக்கையை உள்ளடக்கியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகம் என்பது நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப பாடுபடுவது என குறிப்பிட்டுள்ள நீதிபதிகள் கண்மூடித்தனமாக இடையூறு செய்யும் தேர்தல் செயல்முறை தேவையற்ற சந்தேகத்திற்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஒப்புகை சீட்டு2 (6)

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றுள்ளார். மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து மக்கள் மத்தியில் தவறான பிரச்சாரம் செய்து வந்த எதிர்கட்சிகளின் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீது அவ நம்பிக்கையை ஏற்படுத்தியதற்காக எதிர்கட்சிகள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

3 ஆம் கட்ட தேர்தல் 1 (16)

3 ஆம் கட்ட மக்களவை தேர்தல் மே மாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. முக்கிய அரசியல் கட்சிகளின் உயர்மட்ட தலைவர்கள் நாடு முழுவதும் பேரணிகள் மற்றும் சாலை பவனி நிகழ்ச்சிகள் மூலம் வாக்காளர்களை கவர்ந்து வருகின்றனர். 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 95 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு வரும் மே மாதம் 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. 3 ஆம் கட்ட தேர்தலில் மொத்தம் ஆயிரத்து 351 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தரில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்று பேசினார். தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் 3 ஆவது ஆட்சியின் போது உலகின் முதல் 3 பொருளாதார நாடுகளில் இந்தியாவும் இருக்கும் என்று அவர் தெரிவித்தார். சட்டப்பிரிவு 370 ரத்து, ராமர்கோவில் கட்டுதல், பயங்கரவாதம் மற்றும் நக்சலிச அச்சுறுத்தலை வெற்றிகரமாக சமாளித்தல், நாட்டில் அமைதியை ஏற்படுத்துதல் போன்ற வரலாற்று சிறப்பு மிக்க

3 ஆம் கட்ட தேர்தல் 1 (12)

முடிவுகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடியின் அரசு சான்றாக விளங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் வல்சாத் மாவட்டத்தில் உள்ள கரம்பூரில் நடைபெற்ற பேரணியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திருமதி பிரியங்கா காந்தி வத்ரா பங்கேற்று பேசினார். தனது கட்சி ஆட்சிக்கு வந்தால், நகர்புறங்களில் 100 நாள் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பழங்குடியின மக்களுக்காக சிறப்பு பட்ஜெட்டை ஒதுக்கி, ஏழைகள், விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் நலனுக்காக காங்கிரஸ் கட்சி பாடுபடும் என்றும் அவர் தெரிவித்தார். பணவீக்கம் மற்றும் வேலையில்லா திண்டாட்டம் போன்ற முக்கியமான பிரச்சனைகளில் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என கூறி, ஆளும் கட்சியை அவர் விமர்சித்து பேசினார்.

தேர்தல் (8)

பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி இன்று மாலை கோவாவில் உள்ள வாஸ்கோவில் நடைபெறும் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று உரையாற்ற உள்ளார். இக் கூட்டத்தில் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து அவர் வாக்கு சேகரிக்கிறார். கோவாவில் உள்ள 2 மக்களவை தொகுதிகளுக்கான 3 ஆம் கட்ட பொதுத் தேர்தல் மே 7 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதே போன்று கோவாவில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட உள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

*பிரதமர் நன்றி*(9)

மக்களவை தேர்தலில் 2 ஆம் கட்ட வாக்குப்பதிவின் போது வாக்களித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில் விடுத்துள்ள செய்தியில், 2 ஆம் கட்ட வாக்குப்பதிவு மிகவும் நன்றாக இருந்தது என குறிப்பிட்டுள்ளார். 2 ஆம் கட்ட தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு நன்றி எனவும், பாஜக தலைமையில் நல்லாட்சியை வாக்காளர்கள் விரும்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், தேசிய ஜனநாயக கூட்டணியை இளைஞர்களும், பெண்களும் வலுப்படுத்தி வருவதாகவும் பிரதமர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*ராகுல்காந்தி* (10)

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் வேலையில்லாத இளைஞர்களுக்கு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலத்தில் பிஜய்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இளைஞர்களின் உரிமைகளை நிலைநாட்ட காங்கிரஸ் கட்சி உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டார். நாட்டில் வேலையில்லா

இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்த தேவையான திட்டங்களை செயல்படுத்த தாம் உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

*காங்கிரஸ் காரிய கமிட்டி* (8)

மத்திய காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம் இன்று மாலை புதுடெல்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் மீதமுள்ள மக்களவை தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தேர்வு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் திருமதி சோனியாகாந்தி, கட்சியின் பொது செயலாளர் திரு கே சி வேணுகோபால் உட்பட அக்கட்சியின் மூத்த தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

வெங்காயம் (8)

வெங்காயத்திற்கான கொள்முதல் இலக்கு இந்தாண்டு 5 லட்சம் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பூட்டான், பகேரேன், மொாிஷியஸ் மற்றும் இலங்கை ஆகிய 6 நாடுகளுக்கு 99 ஆயிரம் மெட்ரிக் டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. குறிப்பாக மேற்கு ஆசியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி சந்தைகளுக்கு பயிரிடப்படும் 2 ஆயிரம் மெட்ரிக் டன் வெள்ளை வெங்காயத்தை ஏற்றுமதி செய்யவும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

நீட் (7)

மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு வரும் 5 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், தேர்வு மையங்கள் உள்ளிட்ட விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நீட் தேர்வுக்கு இந்த ஆண்டு 23 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். தமிழ், ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட 13

மொழிகளில் இத்தேர்வு நடைபெற உள்ள நிலையில், இதற்கான நுழைவுச் சீட்டுகள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

## கால்நடை தினம் (14)

உலக கால்நடை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்காக கால்நடை மருத்துவர்களின் பங்களிப்பை கவுரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு கால்நடை மருத்துவர்கள்-இன்றியமையாத சுகாதார பணியாளர்கள் என்பதே கருப் பொருளாகும்.

உலக கால்நடைகள் மருத்துவ தினத்தை ஒட்டி, கால்நடைகளுக்கான சிறப்பு சிகிச்சை முகாம் இன்று புதுச்சேரி டி.என் பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. புதுச்சேரி பிராணிகள் நலன் மற்றும் பாதுகாப்பு இயக்கத் தலைவரும், விலங்குகள் நல அதிகாரியுமான டாக்டர் செல்வமுத்து தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், ஏராளமான கால்நடைகளுக்கும், செல்லப்பிராணிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டன. மேலும், இந்த சிகிச்சை முகாமில் பங்கேற்ற கால்நடை விவசாயிகளுக்கு,

கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து கரைசல், பவுடர் போன்ற மருந்துகள் வழங்கப்பட்டன.

*ஸ்ரீராமுலு 1* (14)

புதுச்சேரியில் வெப்ப அலை இல்லை என்றாலும் ஏனாமில் வெப்ப அலைக்கு வாய்ப்பு இருப்பதால் நிலைமைகளை சமாளிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்துள்ளார். நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியே செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும் என்றும், குறிப்பாக வயதானவர்கள், குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் இணை நோய் உள்ளவர்கள் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், வெயில் நேரத்தில் அவசியமாக வெளியில் செல்ல நேரிட்டால் தவறாமல் தொப்பி அல்லது குடை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். கோடையில் அனைவரும் போதிய அளவில் நீர் அருந்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, புதுச்சேரியில் வெப்பத்தின் தாக்கத்தை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்தார்.

*ஸ்ரீராமுலு 2* (11)

வெப்பத்தின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பது குறித்து, டாக்டர்கள், செவிலியர்கள், ஆஷா பணியாளர்கள் மற்றும் ஏஎன்எம் ஊழியர்களுக்கு பயிற்சிஅளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில், நீர், மோர் மற்றும் ஓஆர்எஸ் கரைசல் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். நிலவரங்களை சமாளிப்பது குறித்து அனைத்து அரசு துறைகளுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், தலைமை செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அவ்வப்போது நிலவரங்களை மறு ஆய்வு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் பறவைக் காய்ச்சல் இல்லை என்றாலும், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப் படுவதாக டாக்டர் ஸ்ரீராமுலு மேலும் கூறினார்.

*மீனவர்கள் விடுதலை* (10)

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 24 மீனவர்கள் இன்று சென்னை திரும்பினர். இவர்கள் கடந்த மாதம் 24 ஆம் தேதி 2 விசைப்படகுகளில் ராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் மீன்

பிடித்துக்கொண்டிருந்தனர். இவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து, அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்தனர். இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அரசு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியதை தொடர்ந்து இலங்கை நீதிமன்றம் இம்மீனவர்களை விடுதலை செய்து, இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தது. உரிய நடவடிக்கைகளுக்கு பின்னர் இம் மீனவர்கள் இன்று தாயகம் திரும்பினர்.

*வானிலை (4)*

தமிழகம் மற்றும் புதுச்சேரி, கேரளா மற்றும் கடலோர ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்ப நிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மக்களவை தேர்தலில் 88 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்ற 2 ஆம் கட்ட தேர்தலில் 70.21 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2 ஆம் கட்ட மக்களவை தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். பாஜக தலைமையிலான கூட்டணிக்கு இளைஞர்களும் பெண்களும் ஆதரவு அளித்து வருவதாக அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

3 ஆம் கட்ட மக்களவை தேர்தல் மே மாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.